Registered as a Newspaper

When only the best is Good Enough BUY



Solide Pumps

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

SOLIDE PRODUCTION
சீனாவில் இருந்து இறக்குமதி செய்த வேகம் குறைந்த மோட்டர்கள்
1/4 HP இல் இருந்து 3 HP வரையில்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
" சொலிட் "
பண்டத்தரிப்பு அல்லது லிங்கம்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு பங்குனி மீ 01 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 24 (14 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:27

## மன்சூர் இன்று கூட்டும் அவசர மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 14

1987 டிசம்பரில் நடைபெறாத ஜீ. சி. ஈ சாதாரண தரப் பரீட்சை தொடர்பாக ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது.

இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் ஜீ. சி. ஈ. சாதாரண தர வகுப்புக்கள் உள்ள சகல பாடசாலைகளினதும் அதிபர்கள், வட்டாரக் கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இவர்களைக் கூட்டத்துக்குத் தவறாது சமுகந் தருமாறு யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

## போக்குவரத்துச் சபை பஸ்கள் எதிர்நோக்கும் எரிபொருள் பிரச்சினை

யாழ்ப்பாணம் மார்ச் 14

வட பிராந்திய போக்குவரத்துச் சபை எரிபொருள் தட்டுப்பாட்டினால் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. எனினும் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தச் சிக்கலைச் சமாளிப்போம்.

இப்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

சிலவாரங்களாக பருத்தித்துறை, காரைநகர், சோண்டாவில் சாலைகளுக்கான எரிபொருள் வழங்கப்படாத காரணத்தினாலும், கையிருப்பிலிருந்த எரி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா இராணுவம் மீனவருக்குத் தொல்லை

குருநகர், மார்ச் 14

யாழ் - பண்ணை வீதியால் சென்று வரும் மீனவர்களிடம் ஸ்ரீலங்கா இராணுவம் மீன், இறால் கேட்டுத் தொல்லை கொடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

மீனவர்கள் இது குறித்து பண்ணை வீதியில் கடமையில் உள்ள இந்திய அமைதிப் படையினரிடம் புகார் செய்து வருகின்றனர்.

அல்லைப்பிட்டி, மண்டைதீவு, ஒலைத்துறை ஆகிய பகுதிகளுக்குக் குருநகரில் இருந்து சென்று தொழில் செய்து மாலையில் திரும்பும் மீனவர்களிடமே ஸ்ரீலங்கா இராணுவம் மீன், இறால் கேட்டுத் தொல்லை கொடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அமைதிப்படையினரைப் போன்று ஹிந்தி மொழியில் பேசி நடிப்பதாகவும் சம்பந்தப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (ஒ-51)

## 1987 டிசம்பரில் தடைப்பட்ட ஜீ. சி. ஈ பரீட்சைக்குப் பதிலாக

# மாவட்ட மட்டப் பரீட்சை நடத்துவது பற்றித் தகவல்

## ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் செயலாளர் விஜேமானே வெளியிட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 14

**யாழ்ப்பாண மாவட்டத்தில், கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெறாது தடைப்பட்ட ஜீ. சி. ஈ. சாதாரண தர பரீட்சைக்குப் பதிலாக, மாவட்ட மட்டத்தில் ஒரு பரீட்சையை நடத்துவதற்கான அதிகாரம் மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்படும்.**

இது குறித்து அனேகமாக முடிவாகிவிட்டதாகவும், மிக விரைவில் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூருக்கு இது அறிவிக்கப்படும் என்றும் —

தடைப்பட்ட பரீட்சைக்குப் பதிலாக பரீட்சைத் திணைக்களம் விசேட பரீட்சை எதையும் நடத்தமாட்டாது என்றும்—

கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எ. விஜேமானே தம்மைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் தெரிவித்தார் என்றும்—அறிய வந்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம், பலாலி ஆசிரியர் கலாசாலை கிளையின் தலைவர் திரு. ப. கிருபாகரன் ஆகியோர் கொண்ட தூதுக்குழு ஒன்று கல்வி அமைச்சின் செயலாளர் திரு விஜேமானேயை கடந்த வெள்ளி கிழமை சந்தித்துப் பேசியது அப்போது யாழ் மாவட்டத்தில் ஜீ சி ஈ சாதாரணதர பரீட்சையை நடத்த வேண்டுமெனத் தூதுக்குழு வலியுறுத்தியது.

அப்போதே, யாழ். மாவட்டத்தில் தடைப்பட்ட ஜீ. சி ஈ சாதாரணதரப் பரீட்சையை பரீட்சைத் திணைக்களம் நடத்த மாட்டாது எனவும், ஆனால் மாணவரின் நலன் கருதி மாவட்ட மட்டத்தில் ஒரு பரீட்சையை நடத்துவதற்கான அதிகாரத்தைக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்க அநேகமாக முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்கள் இரண்டாம் தவணை தொடக்கம் ஆண்டு 12க்கான வகுப்பில் சேர்ந்து தமது உயர் கல்வியைத் தொடரலாமெனவும் அவர் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

கல்விப் பணிப்பாளரினால் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் உயர் கல்வியைத் தொடரலாமே தவிர அச்சான்றிதழை வேறு விடயங்களுக்கு உபயோகிக்க முடியாதெனவும்— இவ்வருட இறுதியில் நடத்தப்படும் பரீட்சையில் அவர்கள் தோற்றிச் சித்தியெய்த வேண்டும் எனவும்— அவர் தூதுக் குழுவிடம் தெரிவித்தார். (அ)

### முச்சந்தி முரளி!



அப்ப, இப்ப, கண்காணிப்பு வலயம் மேற்கிலை மட்டும் தான் இல்லைப்போலை ஒரேயடியாய் அங்கையும் போட்டால், இந்த விஷயத்திலையும் இலங்கை ஒரு சாதனையை நிலைநாட்டலாம் (ப......!

## இன்றைய கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் நடைபெறும்.

இன்று நண்பகல் 12 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் ஆரம்பமாகும். (ஒ-7)

## மன்னார்ப் பகுதியில் இலங்கை ராணுவம் மீது புலிகள் தாக்குதல்

மன்னார்ப் பகுதியில் உள்ள இலங்கை இராணுவ முகாம் ஒன்றின் அருகில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்று அதிகாலை நடந்த இந்தச் சம்பவத்தின்போது இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் சென்ற ஜீப் வண்டியும் தீக்கிரையாக்கப்பட்டது.

இதேவேளை வவுனியா–திருமலை வீதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் அமைதிப்படை வீரர்கள் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

இது நேரடித் தாக்குதல் சம்பவமா அல்லது கண்ணிவெடிச்சம்பவமா என்பது பற்றிய தீர்க்கமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (அ-ஒ-எ)

## ● 18ஆம் திகதி சூரியகிரகணம்

கொழும்பு, மார்ச் 14

இம்மாதம் 18ஆம் திகதி சூரிய கிரகணம் இடம்பெறுகிறது.

இலங்கையில் சூரியகிரகணத்தின் ஒரு பகுதியே தெரியும்.

காலை 6-16 மணியில் இருந்து 6 59 மணி வரை இது நீடிக்கும்.

சூரிய கிரகணத்தின் இரண்டாம் பகுதியே இலங்கையில் தெரியும். 43 நிமிடங்கள் நீடிக்கும் இக்கிரகணத்தில் சூரியனின் 63 சதவீதத்தைச் சந்திரன் மறைக்கும். (ஒ-எ)

# பேச்சுக்களை உடனே தொடங்க புலிகள் ராஜீவுக்குக் கடிதம்

## இந்தியா சொல்கிறது

சென்னை, மார்ச் 14

உடனடியாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும்படி இந்தியப் பிரதமருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் செய்திஅனுப்பியுள்ளது

இப்படி இந்திய வானொலி நேற்று மாலை தெரிவித்தது.

வானொலிச் செய்தி வருமாறு:-

பிரதமருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் அனுப்பிய செய்தியின் விவரமும் வெளியிடப்பட்டுள்ளது.

செய்தி விவரம் வருமாறு:

தாக்குதல் நிறுத்தப்படவேண்டும்; பேச்சுக்கள் தொடங்கப்பட வேண்டும் என்றே எமது இயக்கம் வலியுறுத்தி வந்துள்ளது.

தற்போது இலங்கையில் நடைபெறும் போரை எதிர்க்கின்றோம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைப் பொறுத்த மட்டில் அதனை அமுல் நடத்த ஒத்துழைப்புத் தருவதாக உறுதியளித்தோம்,

தமிழரின் நலன்கள், இலட்சியங்களை இந்த ஒப்பந்தம் பாதுகாக்கும் என்று இன்னும் வலியுறுத்துகின்றோம்

ஆனால் இலங்கை அரசாங்கத்தின் இனவெறிப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ★ பிரபா கடிதத்தை இட்டு வெளியிட்டார்!

சென்னை மார்ச் 13

பிரதமர் ராஜீவ் காந்திக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் எழுதிய கடிதம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் சென்னையில் வெளியிடப்பட்டதாக ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ் மாவட்டத் தளபதி கிட்டுவினால் திரு பிரபாகரனின் கடிதம் வெளியிடப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் கடந்த 22 தினங்களாக சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும் திருமதி அன்னம்மா டேவிட்டின் உணர்வுகளை மதித்து இக் கடிதத்தை எழுதுவதாக திரு. பிரபாகரன், பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். (அ-எ)

## தென்னிலங்கையிலும் கடற் கண்காணிப்பு வலயம்

கொழும்பு மார்ச் 14

கடல் கண்காணிப்பு வலயம் தென் இலங்கையிலும் அமைக்கப்படவுள்ளது.

தென் இலங்கைத் தீவிரவாதிகளுக்குக் கடல் வழியாக ஆயுதங்கள் கிடைப்பதைத் தடுப்பதற்காக இக்கடல் கண்காணிப்பு வலயம் பிரகடனப்படுத்தப்படும்.

இதற்கரான பூர்வாங்க நடவடிக்கைகளைக் கொழும்புப் பாதுகாப்பு அமைச்சு எடுத்து வருகின்றது.

இதேவேளை வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் கடல் கண்காணிப்பு வலயங்கள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்விரு வலயப் பிர

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

14-03-1988
பங்குனி 1
திங்கட்கிழமை
சுபநேரம்:
12 21 முதல் 1-51 வரை
ராகுகாலம்:
7-51முதல் 9-21 வரை.
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

## கலைஞர் கருணாநிதி தான் எனது முதலாவது எதிரி!

### ஜெயலலிதா பேட்டி

(சென்னையிலிருந்து அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி ந. வித்தியாதரன்)

கோவை, மார்ச் 13

"கருணாநிதிதான் என் முதல் எதிரி" என்று ஜெயலலிதா கூறினார்.

ஜெயலலிதாவிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்வியும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: கோவையில் உங்களுக்கு வரவேற்பு எப்படி இருந்தது?

பதில்: கோவையில் எனக்கு அளிக்கப்பட்ட எழுச்சிமிகு வரவேற்பைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தேன் பொது மக்களும் தொண்டர்களும் என் மீது நம்பிக்கை வைத்து உள்ளனர். இந்த நம்பிக்கைக்கு உரியவளாக நடக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரம் அடைந்து உள்ளது.

கேள்வி: நீங்கள் தேர்தலில் போட்டியிடுவீர்களா?

ப: நிச்சயம் போட்டியிடுவேன்

கே: எந்தத் தொகுதியில் போட்டியிடுவீர்கள்?

ப: அது பற்றி அரசியல் விவகாரக் குழுதான் முடிவு எடுக்கும்.

கே: ஜானகி இராமச்சந்திரனை எதிர்த்துப் போட்டியிடுவீர்களா?

ப: அரசியல் விவகாரக்குழு சொன்னால் போட்டியிடுவேன். தயங்க மாட்டேன். ஒவ்வொரு மாவட்டத்திற்குச் சென்றாலும் அந்த ஊர்களில் எங்கள்தொகுதியில் போட்டியிடுங்கள் என்று கூறுகிறார்கள்.

**தேர்தல் எப்போது?**

கே: தேர்தல் எப்போது வரும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

ப: விரைவில்தேர்தல் நடத்த வேண்டும் என்று மத்தியஅரசைக் கேட்டுக் கொள்கிறேன் சட்டப்படி 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும். ஜூன் மாதத்திற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல் படை சுயேச்சையாகஇயங்கும்

கொழும்பு மார்ச் 14

ஊர்காவல் படை சுயேச்சையான முறையில் இயங்க அனுமதிக்கப்படும்.

இப்போது பொலீஸ் கட்டுப்பாட்டில் ஊர்காவல் படை இயங்குகின்றது.

இனிமேல் அது துணைப் படையாக இயங்கும்.

ஊர்காவல் படை நிர்வாகத்தை மாவட்ட அதிகாரியே இனி மேற்கொள்வார்.

எப்படி இருப்பினும் ஊர்காவல் படையினரின் சம்பளம் பொலீஸ் அத்தியட்சகரினால் தான் தொடர்ந்து வழங்கப்படும்.

ஊர்காவல் படையில் தற்சமயம் இருபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர் (ஒ-எ)

## கனடா செல்லும் வழியில் ஈழத்தமிழர் இருவர் கைது!

மணிலா, மார்ச் 13

மலேசியாவில் இருந்து கனடா சென்ற இரண்டு இலங்கைத் தமிழர்கள் மணிலா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

பிரயாண தஸ்தாவேஜுகளில் மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்தே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் இளம் பெண். (ஒ-எ)

## பலாங்கொடயில் ஒருவர் சுட்டுக் கொலை!

பலாங்கொட பொலீஸ் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு. ஜே. வி. பி. தீவிரவாதி என்று சந்தேகிக்கப்பட்ட ஒருவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நாஷனல் 300, 370, 7000 J. V. C. Akai வீடியோ செட் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை] யாழ்ப்பாணம். (1860)

பருத்தித்துறை புலோலிக் கிராமக் கோட்டடியில் வீடுகட்டக் கூடிய நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மு. மருசபிரான், 'ராணி பவனம்' கிராமக் கோட்டடி, புலோலி. (2005)

தெல்லிப்பளை கிழக்கு துர்க்கா தேவி ஆலயத்திற்கு அண்மையாக புகையிரத வீதி ஓரமாகப் புதிய சகல வசதிகளும் உள்ள 16 1/2 பரப்பு வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஹோட்டல் ஞெவெல்ஸ் 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1625)

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ச. உருத்திரன் மணியகாற் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (1931)

வெளி வந்து விட்டது! சமூகக் கல்வி ஆண்டு 11 (புதிய பாடத்திட்டம்). ஆசிரியர் ந. தர்மபாலன், சகலபுத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (1938)

### சேவை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவிகளுக்கான உணவும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும். சகல விதமான சிற்றுண்டி வகைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும் திருமதி B. நிர்மலா தேவி, 671, K. K. S. றோட் பூநாரி மரத்தடி, யாழ்ப்பாணம் (2033)

யாழ். சைனீஸ் ரெஸ்ரோறன்ரின் தினசரி காலை 10 மணி தொடக்கம் மாலை 6-30 மணி வரை திறந்திருக்கும் சைனீஸ் றோல்ஸ் புதன்கிழமைகளிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மட்டும் பெற்றுக் கொள்ளலாம். அல்லது முன்கூட்டி ஓடர் செய்தும் பெற்றுக் கொள்ளலாம். (1906)

### போட்டோ ஸ்ரட்

'கிளின்-கட்' யாழ் நகரின் முன்னணிநிறுவனம். உங்களின் போட்டோ ஸ்ரட் பிரதிகளுக்கு; கிளின்-கட் இல:- 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39/17, Power House Road, 3rd Lane, Jaffna. (1803)

### றோணியோ

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (Typewriting) றோணியோ வேலைகள் மற்றும் சகல விதமான அச்சுவேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும் தயா அச்சகம், 138, நாவலர் றோட், மனோகரா சந்தி), யாழ்ப்பாணம்.

### தேவை

பின்வருவனவற்றில் தம்மால் இயலுமான பாடங்களைக் கற்பிப்பதற்கு தகுதியானவர்களிடமிருந்து உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வருடம் 7-11வரை கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி. பெண்களுக்கான Dress Making, Hair Style, Iceing, Cookery Flower Making. விபரங்களுக்கு Director, Chan Institute, 102 156) Saddanather Road, Nallur. (2022)

வாடகைக்காயினும், குத்தகைக்காயினும், விற்பனைக்காயினும் வீடு தேவை. மாநகர சபை எல்லைக்குள்ளிருப்பின் விரும்பத்தக்கது. தொடர்பு:- டவர் வாச் வேர்ஸ், ராணி சினிமா அருகாமை 11 ஜுபிலி பஜார், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1932)

1. யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் பிரபலிக்கமான வீதி அருகாமையில் ஒரு வீடு அல்லது வீடு கட்டக் கூடிய காணி;

2 நல்ல நிலையிலுள்ள "Ve-Pa" ஸ்கூட்டர் அல்லது C 50. விபரம்:- J. P. T, 3 நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (1930)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் காரியாலய ஸ்ரோர்ஸ் ஆகியவற்றிற்குந்த கட்டிடம். இருபிரிவாக வாடகைக்கு உண்டு தொடர்பு கொள்க. நேசன், ஹஜி ஹட்வெயார்ஸ், No. 8 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1912)

### வகுப்புகள்

புதிய கல்வித் திட்டத் திறமைய ஒப்படைவுகள் நிறைவேற்றுவதற்குரிய கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற சகல பாடங்களையும் சிறந்த முறையில் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். காலை 6-00-8-30 ற்குள் நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (1886)

பாலர் வகுப்பிலிருந்து (O/L), (A/L) ற்குரிய சகல பாடங்களையும், (O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதம், மற்றும் (A/L) இற்குரிய Accounts, Economics ஆகிய பாடங்களையும் சிறப்புப் பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும் ஆறுமுநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி (1886)

### காணவில்லை

பிட்டமாறுவ றோலேலி எஸ்டேட்டைச் சேர்ந்த பிச்சை ஜெயராமனுகிய எனது அடையாள அட்டை கொழும்புத்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1937)

---

ருகுணு

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

## அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு மார்ச் 14

பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போனதாகக் கருதப்படும் விரிவுரையாளரை அரசு கண்டுபிடித்து ஒப்படைக்கும் வரை நிர்வாகக் கடமைகளைச் செய்யப்போவதில்லை என்று றுகுணு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இது சம்பந்தமாக எதிர்கட்சிகளுடன் இணைந்து இரண்டு பொதுக் கூட்டங்களைக் கொழும்பிலும் மாத்தறையிலும் நடத்தவும் சங்கம் முடிவு செய்து இருக்கின்றது.

இதனிடையில் றுகுணு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவையும் பின்போட சங்கம் தீர்மானித்திருக்கின்றது.

காணாமற்போன விரிவுரையாளர் சம்பந்தமாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள பேராசிரியர்கள், டாக்டர்கள் கொண்ட 15 பேர் கமிட்டி ஒன்றும் சங்கத்தினால் அமைக்கப் பட்டுள்ளது. (இ-எ)

## ஜே.ஆரின் வாசஸ்தலம்: தாக்கியோருக்கு பிணை இல்லை

கொழும்பு. மார்ச் 14

மிரிஸ்ஸயில் உள்ள ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் விடுமுறை வாசஸ்தலத்தைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் பதினொரு சந்தேக நபர்களையும் பிணையில் விடுதலை செய்ய முடியாது என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விமல் விக்கிரமசூரியா தீர்ப்பளித்தார்.

தலைமறைவாக உள்ள ஏனைய பதினொரு எதிரிகளையும் கைது செய்யும்படி நீதிபதி வாரண்ட் பிறப்பித்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான மறுநாள் இடம் பெற்ற கலவரத்தின் போது ஜனாதிபதியின் விடுமுறை வாசஸ்தலம் தாக்கப்பட்டது. (ஒ-எ)

---

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை

### தனியார் பாதுகாப்புச் சேவை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா சாலைகளினதும் யாழ். மத்திய பஸ் நிலையத்தினதும் பாதுகாப்புச் சேவையினை 1-4-1988 முதல் பொறுப்பேற்று நடத்துவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட பாதுகாப்புச் சேவை ஸ்தாபனங்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவத்திற்கும் க. தனபாலசிங்கம் பொது ஜன தொடர்பு அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 22-03-88**

சி. கனகரத்தினம்
தலைவர் / சகவுடை அதிகாரி
வ. பி. போ. சபை.

பலாலி வீதி,
கோண்டாவில்.

---

## யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம்

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 18ம் திகதி நடைபெற இருந்த மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் இடம் பெறவில்லை இக் கூட்டம் 26-03-88 காலை 9-30 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும். அங்கத்தவர்கள் தவறாது சமூகமளிக்கும் படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை.

சு. டி. வ. கலாலா
அழைப்பாளர்
பழைய மாணவர் சங்க
செயற்குழுவிற்காக.

---

## வைப்பாளர்களுக்கான முக்கிய அறிவித்தல்

ஹோம் பினன்ஸ் லிமிடெட் தற்போது ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது எமது வழமையான அலுவல்கள் 01-06-88 முதல் செயல் படுவதற்கு சகல வைப்பாளர்களுக்கும் பங்கு வழங்கும் இறுதித் திகதி 30-04-88 என்பதையும், நிரந்தர இயக்குனர் சபை ஒன்றினை தேர்ந்தெடுப்பதற்கான பங்குதாரர் கலந்து கொள்ளும் விசேட பொதுக்கூட்டம் 21-05-88இல் நடைபெறும் என்பதனையும் அறியத் தருகின்றோம். இது சம்பந்தமான சுற்றறிக்கை எம்மால் சகல வைப்பாளர்கட்கும் அனுப்பப்பட்டு வருகின்றது மேலதிக விபரங்களை எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்
ச. வைத்தீஸ்வரன்
பொதுமுகாமையாளர்
யாழ்ப்பாணம்.

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்,
155, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

---

மானநஷ்ட வழக்கு:

## ஜனாதிபதிக்கு அனுரா கடிதம்

கொழும்பு, மார்ச் 14

மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்யப்படுவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா: ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார்

'வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாக எனது சட்டத்தரணிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்'' இப்படி திரு. அனுரா பண்டாரநாயகா, திரு. ஜெயவர்த்தனவுக்கு அறிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் கூற்று ஒன்று தொடர்பாக 10 கோடி ரூபா நஷ்ட ஈடு கோரி திரு. அனுரா பண்டாரநாயக்கா இவ் வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளார்.

கடந்த ஆண்டு போதனு ஆஸ்பத்திரிகள் அமைச்சுக் கட்டடத்தைக் கூட்டம் ஒன்று தாக்கிய போது, அக் கூட்டத்தினரிடையே திரு. அனுராவும் காணப்பட்டார் என்று திரு. ஜெயவர்த்தன அறிக்கை ஒன்றில் கூறியிருந்தார். இக்கூற்று தன்னை அவமரியாதைப் படுத்துவதாக உள்ளது என்று அனுரா கூறியிருந்தார். (ஒ-எ)

## யுவதிகளுக்குத் தொழிற் பயிற்சி

பருத்தித்துறை, மார்ச் 14

பருத்தித்துறையில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டத்தைப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஆரம்பித்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து பத்து யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு புலோலி மேற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல் பாடசாலையில் பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு ஆறுமாதகால தையல்பயிற்சியை முடித்துக்கொண்ட பின்னர் ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய சிங்கர் தையல் மெசின் வழங்கப்படவுள்ளது. (இ-118)

---

## விநியோகம்

எல்லா இன வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் - புறொயிலர், கறுப்பு, பிறவுண் சேவல் குஞ்சுகளும் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி நாட்களில் விநியோகிக்கப்படும் முன் கூட்டி பணத்துடன் பதிவு செய்யும் இடங்கள்:-

R. S. K. Farm - முருகபதி, உரும்பிராய்.
குபேரன் ஸ்ரோர்ஸ் - கொக்குவில் சந்தி, கொக்குவில்.
Farm House - கோட்ஸ் ரோட், மல்லாகம்.
இணுவில் வீடியோ சென்ரர் - இணுவில்.
Red Rose Farm - தெனியெம்பை, வல்வெட்டித்துறை.
கோகிலா கூல்பார் - கொடிகாமம். 1936

---

வெற்றுச் சாக்கு

## கேள்விப் பத்திரம் கோரல்

எமது சங்கத்தால் பலரகமான 3500 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்வி கோரப்படுகின்றன.

ரூபா 5/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்'' எனக் குறித்து பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். சாக்குகளை கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 19-03-1988**

பொதுமுகாமையாளர்
புலோலி பல. நோ. கூ. சங்கம்

---

## அறிவித்தல்

யாழ் மாவட்டத்தில் 1983ம் ஆண்டு முதல் வேலையிழந்தவர்களின் (இரையங்க, ஊழியர்கள், கடைச்சிப்பந்திகள், கூலிவேலை, மேசன் வேலை, தச்சுவேலை, கடற்றொழில் செய்பவர்கள், மற்றும் அரச, தனியார், கூட்டுத்தாபன ஊழியர்கள்) விபரக் கொத்து சேகரிக்கப்படுகிறது விபரங்களுக்கு கீழ் காணும் முகவரியில் கடிதத் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
சமூக அபிவிருத்திச் சபை,
13, முருக மூர்த்தி லேன்,
வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்.

(1934)

---

# ஜனநாயகத்துக்காக பண்டார நாயக்கா உயிர்த் தியாகம் செய்தார்

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 14

காலஞ் சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா உண்மையான ஜனநாயகவாதி. ஜனநாயகத்தைக் காப்பாற்ற அவர் தனது உயிரையே ஈந்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்கண்டவாறு தெரிவித்தார்.

குருநாகலில்சர்வதேசப் பெண்கள் தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாக ஜனாதிபதி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது;

தீவிரவாதச் செயல்கள் புரிந்ததாக கைதாகி இருப்பவர்கள் விஷயத்தில் யு.என்.பி. கட்சி சிறிதும் கருணை காட்ட மாட்டாது.

நாட்டில் இருந்து தீவிரவாதச் செயல்களை ஒழிக்க அரசு தன்னாலான நடவடிக்கைகளை எடுக்கும்.

1983 கலவரம், 1971 கிளர்ச்சி போன்றவை மீண்டும் இந்த நாட்டில் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது.

பெண்கள் நாட்டில் சமாதானம் ஏற்பட அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் —

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார் (இ-ஒ)

## எண்மர் கைது!

கொழும்பு, மார்ச் 14

ஜே. வி. பி. தீவிரவாதி என்ற சந்தேகத்தின் பேரில் ரிசேவ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் வேறு ஏழு பேரையும் பொலீஸார் கடந்த புதன்கிழமை கைது செய்தனர்.

பேலிய கொடையில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து கைக்குண்டு, துப்பாக்கி ஆகியன கைப்பற்றப்பட்டன (ஒ-எ)

---

## கண்ணீர் அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பிதழும்

மாதா மடியில்
02-03-1956



மடித்தவன் அடியில்
18-11-1987

**அமரர் நடராசா இராசகுமார்**

சதறிக் குலைகின்றோம் கண்ணீர் பெருக்கு கிறோம் இதயத்தே இராசகுமார் என்றும் உன் நினைவொன்றே குதிசெய்ய நாம் வருந்தல் கோமானே! கேட்டிலையோ? துடிதுடிக்க உன்னுடலும் தோய்ந்த குருதியிலே கிடந்ததுவோ? காணவில்லைக் கேட்டறிந்தோம், உன்னை இனி என்றைக்கும் காண இடமில்லை. ஆனாலும் நெஞ்சில் இருத்தி நினைவால் வழிபட்டு வந்திப்போம் வாழ்வாய் நீ வானத்திறை அடியே.

நாளை (15.3 88) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் அதனைத் தொடரும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைக்கோட்டை றோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

சகோதர சகோதரிகள்
மைத்துனர்கள்
(2026)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

**அமரர் கந்தையா விஞசித்தம்பி**
**(இளைப்பாறிய ஆசிரியர் காரைநகர்)**

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகக் கொண்டவரும் அதே ஊர் வாரிவளவில் வசித்தவரும், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியரும் [ய/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், களபூமி காரைநகர்] ஆகிய கந்தையா விஞசித்தம்பி அவர்கள் 14-02-88ல் அமரரானார். அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள், 15-03-88 செவ்வாய்க்கிழமை காரைநகர் வாரிவளவு இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் நண்பர்கள், உறவினர்கள், பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு மதிய போசனத்திலும் பங்கு பற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எனது கணவர், எங்கள் தந்தையார், எமது மாமனார், எங்கள் பேரனார் சார்பில் அவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பித்து பலவிக உதவிகள் புரிந்தவர்களுக்கும் யாழ். சென்றல் நேர்சிங் ஹோம் திருநெல்வேலி, யாழ். போதனா வைத்தியசாலை, ஆகிய நிலையங்களைச் சார்ந்த வைத்திய நிபுணர்கள், தாதிமார்கள், மற்றும் சேவை செய்தோர் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம் அத்துடன் அனைவரையும் நண்பகல் போசனத்தில கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

1933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உரிமை இல்லாத இடத்தில் உரித்துடன் பேசி விரோதிகளைச் சம்பாதிக்காதே!

—சுவாமி கங்காதரானந்தஜி


# உதயன்

உண்மை - அநுசாமை - நடுநிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24806
யாழ்ப்பாணம். 22073
14.03.1988 த பெ.இல:-23


## போலிகளை நாடாதீர்!

போலியான பிறப்பு, விவாக, இறப்புச் சான்றிதழ்கள் பெரும் எண்ணிக்கையில் குடாநாட்டில் விநியோகிக்கப்படுவதாகச் செய்தி வெளிவந்துள்ளது. இந்தப் போலிச் சான்றிதழ்கள் குறித்து மிகக் கவனமாக இருந்து இனங்கண்டு கொள்ளுமாறு மாவட்டத்தின் மேலதிக பதிவாளர் பொதுமக்களை எச்சரித்திருக்கிறார்.

பிறப்பு, விவாக, இறப்புச் சான்றிதழ்கள் மிக முக்கியமான தஸ்தாவேஜுகளாகும். கல்வி, தொழில்வாய்ப்பு, வெளிநாட்டுப் பயணம், ஓய்வூதியம், நஷ்டஈடு, நீதிமன்ற வழக்கு மற்றும் இன்னோரன்ன பல தேவைகளுக்கு இந்தச் சான்றிதழ்கள் கட்டாயமானவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் முக்கியமானவை.

ஆகவே இவற்றில் போலிகளின் புழக்கம் மக்களுக்குப் பல தொல்லைகளையும், கஷ்டங்களையும் தரும் என்பதில் சந்தேகமில்லை.

பணம் உழைக்கும் நோக்கத்துடன் மோசடிக்காரர்கள் போலிகளை வழங்கி, மக்களை ஏமாற்றி விடுவார்கள். அதனால் மாட்டிக் கொள்பவர்களும், சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்பவர்களும், பல இழப்புக்களை எதிர் நோக்குபவர்களும், நஷ்டம் அடைவோரும் போலிகளை வாங்கி ஏமாந்து போகும் பொதுமக்கள் தான்.

கடவுச்சீட்டு, அடையாள அட்டை என்பனவற்றிலும் போலிகள் விநியோகிக்கப்படுவது உண்டு. போலிக் கடவுச் சீட்டுப் பெற்ற பலரும் வெளிநாடுகளுக்குச் சென்ற பின்னர் கூட சட்டத்தின் பிடியில் அகப்பட்டு, தமது தொழில் வாய்ப்புகளை இழந்து, பெரும் பண நஷ்டத்துடன் தாயகம் திரும்பிய பல சம்பவங்கள் இருக்கின்றன.

மோசடி செய்பவன் தப்பிவிட, பணத்தைச் செலவிட்டுப் போலிகளைப் பெற்றுக் கொண்ட அப்பாவிகள் வீணே மாட்டிக் கொள்வது நடைமுறை அனுபவம்.

மோசடிக்காரரும், ஏமாற்றுப் பேர்வழிகளும், குறுக்கு வழியில் பணம் தேடுவோரும், பிறர் கஷ்டத்தில் செல்வந்தர் ஆவோரும் எங்கும் இருக்கிறார்கள். சட்டமும், ஒழுங்கும், விதிமுறைகளும் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படும் இடங்களிலும் அவர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

அமைதி நிலை குன்றி, சட்டம் ஒழுங்கு சரிவரப் பேணப்படாத நிலையில், தகுந்த அரசியல், பொருளாதார பாதுகாப்பில்லாத நிலையில் உள்ள தமிழ்ப் பகுதியில் மோசடியும், ஏமாற்றும் மலிவதில் வியப்பில்லை.

எனவே இது விடயத்தில் தங்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டங்களையும், கஷ்டங்களையும் தவிர்க்க வேண்டிய முழுப்பொறுப்பும் மக்களையே சார்ந்து நிற்கிறது. மிக்க அவதானத்துடனும், எச்சரிக்கையுடனும், இருந்து மோசடிக்காரரின் வலையில் சிக்காது தப்பிக் கொள்ளுதல் அவசியம்.

சில அலுவல்களை அவசரமாக முடித்து விடவேண்டும் என்று கருதியாவது போலிகளை நாடக்கூடாது. இன்று இல்லாவிடினும் என்றோ ஒருநாள் சட்டத்தின் பிடியில் அகப்பட்டே ஆகவேண்டி வரும். இல்லையேல் எப்போதோ ஒருநாள், ஏதோ ஒரு விதத்தில் தெய்வ தண்டனை கிடைத்தே தீரும்.

போலிகளை நீங்களும் நாடாதீர்கள். அவற்றை உருவாக்குவோரை இனங்காட்டவும் தவறாதீர்கள்.

இந்திய மாநில அதிகாரங்கள் கூட இல்லை

# உறுதிமொழியைக் காப்பாற்ற ஜனாதிபதி தவறிவிட்டார்

## ஈழத் தமிழரின் ஒருமைப்பாட்டணி குற்றச்சாட்டு

கொழும்பு மார்ச் 14

இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அளவிலான அதிகாரங்கள் கொண்ட சுயாட்சியை வழங்குவேன் என்றளித்த உறுதிமொழியைக் காப்பாற்ற ஜனாதிபதி ஜெயவர்த்தனா தவறிவிட்டார்.

இப்படி சென்னையில் இருந்து இயங்கும் ஈழத் தமிழரின் ஒருமைப்பாட்டணி, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜரில் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

இலங்கை அரசு தற்போது கொண்டு வந்துள்ள மாகாண சபை முறை, தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகளையே நிறைவேற்றுவதாக இல்லை என்றும் மகஜரில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழரில் மூன்றில் ஒரு பங்கினர் அகதிகளாக இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். இந்த நிலையில் தேர்தலை எப்படி நடத்துவது? என்றும் ஒருமைப்பாட்டு அணி பிரதமரை மகஜர் மூலம் கேட்டுள்ளது. [இ-எ]

### இந்து மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ் இந்து மகளிர் கல்லூரி சாரணியர் எதிர் வரும் 16 ஆம் திகதி பேடன் பவல் தினத்தையும், 24 ஆவது மலர் வெளியீட்டு விழாவையும் நடத்துகின்றனர்.

விழாவுக்கு வடபிராந்தியக்கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-9)

### காணமற் போனோர்: தென்னிலங்கையில் விவரம் சேகரிப்பு

கொழும்பு, மார்ச் 14

தென் இலங்கையில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணமற்போனதாகக் கூறப்படும் ஆட்கள் பற்றிய விவரங்களைச் சகரிப்பதில் அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன

இது பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அண்மையில் மஹர எம்.பி யும், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவருமான தினேஷ் குணவர்த்தனா மாநாடு ஒன்றைக் கூட்டி இருந்தார்.

அதைத் தொடர்ந்து, காணமற்போனவர்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இதனிடையில் 'காணமற்போனதாக' அறிவிக்கப்பட்ட மாத்தறை தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் தர்மவர்த்தன மூனசிங்க பற்றி பிரசுர இயக்கம் ஒன்று நடத்தத் தொழில் நுட்ப மாணவர் சம்மேளனம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. (இ-எ)

### சமய சந்திகளில்

#### தாமரைத்தடாக விநாயகர் கோவில்

யாழ்ப்பாணம் மார்ச் 14

நாயன்மார் கட்டு தாமரைத்தடாக விநாயகர் கோவில் வருடாந்த உற்சவம் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

இவ் விழாநாட்களில் திருமுறைஇசையரங்கும், சிறப்புச் சொற்பொழிவும் தினமும் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை 1008 சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவுறும். (இ-9)

#### திருஷி ஈஸ்வரம் பாலசுப்பிமணியர் கோவிலில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

தெல்லிப்பழை, பன்னாலை திருஷி ஈஸ்வரம் பாலசுப்பிரமணியர் கோவிலில் எதிர்வரும் 18-ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவம் நடைபெற உள்ளது

இதன்படி பெருமான் தையிட்டிப் புலம் வழியாக கீரிமலை தீர்த்தக் கரைக்கு வந்து தீர்த்தமாடி பெரியாவுடைக் கிராம வீதி வழியாக மீண்டும் ஆலயம் சென்றடைவார். (இ-9)

### கிளிநொச்சியில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 14

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் இந்து மாமன்றம் நடத்தி வரும் இந்து சமயப் பரீட்சையில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கிளிநொச்சி சென் திரேசா மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு திரு. எம். ஏ. கனகசிங்கம் தலைமை வகித்தார்.

கணித ஆசிரியர் திரு. எம். தேவேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தி விழாவை ஆரம்பித்து வைத்தார்

பரிசளிப்பு விழாவில் இராமநாதபுரம் மத்திய மகா வித்தியாலய மாணவி செல்வி ஜெஜெயநாதன் கூடுதலான புள்ளிகளைப் பெற்று மகாதேவ ஆச்சிரமத்தினரால் வழங்கப்பட்ட பதக்கத்தையும் பாராட்டையும் பெற்றுக் கொண்டார்

வட்டக்கச்சி மகா வித்தியாலய கணித ஆசிரியர் எட்வேட் மரியதாசனின் ஆசியுரையுடன் "மருத மலர்" என்ற கையெழுத்துப் பத்திரிகையும் வெளியிடப்பட்டது (இ-9)

### தொழில் நுட்ப கல்லூரி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச்14

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அவ்வப் பகுதித் தலைவர்களிடம் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும 16ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

சென்ற ஆண்டு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றத் தவறியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கவேண்டியதில்லை என அறிவிக்கப்படுகிறது. (ஓ-7)

### முதலமைச்சராகத் தெரிவானால்---

கொழும்பு, மார்ச் 14

வடமேற்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக எம். பி பதவியையும் மாவட்ட அமைச்சர் பதவியையும் ராஜினாமாச் செய்த திரு. காமினி ஜெயவிக்ரம பெரேரா, பத்திரிகையாளர் மத்தியில் பேசினார்.

நான் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டால் குருநாகல், புத்தளம் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளின் தண்ணீர்ப் பிரச்சினையை நீக்கி வைப்பேன் என்று அவர் தெரிவித்தார்.

'பத்து ஆண்டுகள் மாவட்ட அமைச்சராக இருந்தீர்களே! அப்போது ஏன் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியவில்லை'' — இப்படி பத்திரிகையாளர் ஒருவர் கேட்டார்.

''நானும் முயற்சித்தேன் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பயங்கரவாதம் இல்லாதிருந்திருப்பின், பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கும்'' — என்று திரு. பெரேரா பதில் அளித்தார். (இ-எ)

### கட்டுநாயக்காவில் இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 14

ஒரு கிலோ ஹெரோயினைக் கடத்திவந்ததாகக் கூறப்படும் இரண்டு இலங்கைப் பிரசைகளை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து போதைவஸ்து தடுப்புப் பிரிவுச்சேவ்டி நேற்றுக் கைது செய்தது.

இந்தியாவில் இருந்து இவர்கள் வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

### வலி வடக்கில் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வு அளிக்கத் திட்டம்

காங்கேசன்துறை, மார்ச் 14

வலி - வடக்கில் இராணுவ நடவடிக்கைகளால் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு மனநோய்க்கு ஆளானவர்கள், தடுப்புக் காவலிலிருந்து விடுதலையானவர்கள் ஆகியோருக்கு புனர்வாழ்வளிக்க வலி-வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படிஒன்றியம் ஏற்கனவே விதவைகள், அநாதைகள் புனர்வாழ்வுக்காக வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் திட்டம் ஒன்றை வகுத்து செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

தற்போது உளரீதியாகப் பாதிக்கப்பட்டோர், தடுப்புக் காவலில் இருந்து விடுதலையானோர் ஆகியோருக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளை ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

அத்துடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உதவியுடன் விவசாயிகள், மீனவர்களுக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுக்கவும் ஒன்றியம் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் திரு. வே. சி. கணேசலிங்கம் தெரிவித்தார். (இ-68)

### வயாவிளான் மகா வித்தியாலயம்: தற்காலிகமாக 26 வகுப்பறைகள் நிர்மாணிக்கப்படும்

காங்கேசன்துறை, மார்ச் 14

வயாவிளான் மகா வித்தியாலயத்தில் 26 வகுப்பறைகளை தற்காலிகமாக அமைத்துக் கொடுக்க அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிதியுதவி செய்துள்ளது

மேற்படி வித்தியாலயம் பலதடவைகள் அசம்பாவிதங்களால் சேதமாக்கப்பட்டு மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

இதனை வலி - வடக்கு பிரசைகள் குழு ஒன்றியம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திடம் சுட்டிக்காட்டியதை அடுத்து மேற்படி வித்தியாலயத்தில் 26 தற்காலிக வகுப்பறைகளை உடனடியாக அமைத்துக்கொடுக்க அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிதியுதவி செய்துள்ளது. (இ-160 68)



### பொய்யாமொழி

**குறள்:**

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து

**பொருள்:**

அழிக்கும் இயல்புடைய சோம்பலைத் தன்னிடம் கொண்டு நடக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடி, அவனுக்கு முன் அழிந்துவிடும்.

### கையேடு

யாழ்ப்பாணம், மார்ச் 14

சுழிபுரம், வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையார் திருமதி நடராசா நாகரத்தினம் நினைவாக, அபிராமி அந்தாதி ஆய்வுரை கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளனர் (இ-9)

### அமெரிக்க யோசனை: இஸ்ரவேல் நிராகரிப்பு

டெல் அவிவ், மார்ச் 13

அமெரிக்காவின் மத்திய கிழக்கு சமரச யோசனை, இஸ்ரவேலின் கூட்டரசில் தவிர்க்க முடியாத பிளவை ஏற்படுத்தி விட்டது.

இதனால், நாடாளுமன்றத்தைக் கலைத்து இடைத் தேர்தலை நடத்துவது பற்றி ஆலோசனை செய்து வருவதாக இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் தெரிவித்தார்.

மத்திய கிழக்குச் சமரச யோசனையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் பிரதமர் அறிவித்து விட்டார்.

பலஸ்தீனியர்களுக்கு சுயாட்சியுடன் கூடிய மாவட்டங்களை உருவாக்குவது பற்றி சர்வதேச மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்று அமெரிக்க யோசனை கூறுகின்றது. (எ)

### திபெத் நிலைமை; அமெரிக்கா கவலை

வாஷிங்டன், மார்ச்.12

திபெத் தலைநகர் லாசாவில் இடம்பெறும் கிளர்ச்சிகள் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்திருக்கின்றது.

திபெத்தில் இடம் பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி அமெரிக்கா கவலை அடைந்திருப்பதாக ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் சாள்ஸ் ஹட்மான் செய்தியாளரிடம் சொன்னார். (எ)

### கடும் நடவடிக்கை

கேப்டவுன், மார்ச் 13

ஆர்ச் பிஷப் டுட்டு ஆரம்பித்த நிறவேற்றுமையை எதிர்க்கும் அமைப்புக்கு எதிராக தென் ஆபிரிக்க அரசு நேற்று தடைவிதித்தது.

இதுபோன்ற17அமைப்புகளை தென ஆபிரிக்க அரசு ஏற்கனவே தடை செய்து விட்டது தெரிந்ததே. (எ)

### தேர்தலைக் குழப்பத் திட்டம்

எல்சல்வடோர், மார்ச் 13

எல்சல்வடோரின் தலைநகரில் கார்க் குண்டு ஒன்று வெடித்ததில் இரண்டு மாணவர்கள் காயமடைந்தனர்.

அடுத்தவாரம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதைக் குழப்பவே இடதுசாரிக் கெரில்லாக்கள் வன்செயல்களில் ஈடுபடுவதாக அரசு குற்றஞ்சாட்டி உள்ளது. (எ)

பிலிப்பீன்ஸ்

# அரசியலில் இராணுவம் தலையிடக்கூடாது

## ஜனாதிபதி அக்யூனோ எச்சரிக்கை

மணிலா, மார்ச் 13

அரசியலில் இறங்கக் கூடாது என்று பிலிப்பீன்ஸ் இராணுவத்தினருக்கு எச்சரிகை விடுக்கப்பட்டது.

ஜனாதிபதி கொரஸோன் அக்யூனோ இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இராணுவப் பயிற்சி முடிந்து வெளியேறியோர் மத்தியில் திருமதி அக்யூனோ உரையாற்றினார்.

அப்போது அவர் சொன்னதாவது:

கம்யூனிஸ்ட் கெரில்லாக்களின் கிளர்ச்சியை நாம் அடக்கவேண்டி உள்ளது. இராணுவத்தினரின் உதவி இதற்குத் தேவைப்படுகின்றது. இதைவிடுத்து இராணுவத்தினர் அரசியலில் ஈடுபடக்கூடாது.

இப்படி திருமதி அக்யூனோ தெரிவித்தார். (எ)

### வெளி உலகில்

### அமெரிக்காவின் செயலுக்கு பனமா கண்டனம!

பனமா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைவிதித்து இருக்கின்றது

பனமாவின் இராணுவத் [illegible] [illegible] கும்படி நிர்ப்பந்திக்கவே இத்தடை விதிக்கப்பட்டதாக அதிபர் றேகன் அறிவித்தார்.

பனமாவின் அமைச்சரவை [illegible] அமெரிக்க அரசின் [illegible] கண்டித்தது. (எ)

### எய்ட்ஸ் நோயாளிகள் தற்கொலை அதிகரிப்பு

சிகாகோ: எய்ட்ஸ் நோயாளிகள் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து உள்ளது அமெரிக்காவில் கடந்த ஒரு ஆண்டை மட்டும் கணக்கில் கொண்டு ஆய்வு செய்ததில் இது தெரிய வந்துள்ளது.

உலகை ஆட்டிப் படைக்கும் நோய் எய்ட்ஸ். அமெரிக்காவில் இது வேகமாக பரவி உள்ளது எய்ட்ஸ் நோய் பாதித்தவர்கள் தொடர்ந்து வாழ்வதை விரும்பாமல் தற்கொலை செய்து வருகின்றனர் சிலர் தற்கொலை செய்து கொள்ள முயன்று உள்ளனர். எய்ட்ஸ் பாதித்தவர்கள் மனோரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் அவர்களுக்கு தற்கொலை செய்யும் எண்ணம் ஏற்படுகிறது என்று அமெரிக்க நிபுணர்கள் கூறுகின்றனர்.

எய்ஸ் நோயாளிகளை பரிசோதிக்கும் டாக்டர்கள உஷாரக இருக்க வேண்டும் நோயாளிகள் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்யலாம் என்றும் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இருபதுமுதல் 5௦வயதுவரைஉள்ளவர்கள் தான் அதிகமாக தற்கொலை செய்து கொள்கின்றனர் 1985ல் மட்டும் 550 பேர் தற்கொலை செய்து கொண்டனர் 60 வயதுக்கு மேல் உள்ளவர்கள் எய்ட்ஸ் வந்தாலும கவலைப்படுவதில்லை. என்று ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**KAILAS Coconut Oil**
(PERFUMED)
சுகந்த வாசமுள்ள கைலாஸ் கோக்கனற் ஒயில் மூளை வளர்ச்சிக்கும் தேக ஆரோக்கியத்திற்கும், கூந்தல் வளர்ச்சிக்கும் உகந்தது
4 அவுன்ஸ் - 15/- 8 அவுன்ஸ் - 25/-
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.



# உதயன்

14 03 - 1988 திங்கட்கிழமை



**C. S. K.**
**Soap Nut Powder**
சி. எஸ். கே. சீயாக்காய் பவுடர்
இது கலப்பில் உள்ள அழுக்கைப் போக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தை தருவதுடன் கூந்தலைக் கருமையாகவும், நீண்டதாகவும் வளரச் செய்யும் கிடைக்கும் இடம்.
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
இல. 5 (76) பெரியகடை,
யாழ்ப்பாணம்.


ஜனாதிபதி பதவி:

## ஜே.ஆர். போட்டியிடின்

## நான் இலகுவில் வெல்வேன்

### சிறிமாவோ சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 14
மூன்றாவது தடவையாக திரு ஜெயவர்த்தன ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுவாரானால் அது எனக்கு மகிழ்ச்சியையே தரும் காரணம் நான் இலகுவாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவேன்.

இப்படி சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

மூன்றாவது முறையாக திரு ஜெயவர்த்தன போட்டியிடக் கூடியதாக அரசமைப்புச் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டு வரப்படவிருப்பதாக செய்தி வெளிவந்து இருக்கின்றது.

அது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே திருமதி பண்டாரநாயக்கா முன் கண்டவாறு சொன்னார்.

"திரு பிரேமதாஸா, அல்லது திரு அத்துலத்முதலி ஆகியவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடின், பலத்த போட்டியாகவே அது இருக்கும்.

கொழும்பு மாநகர வீதிச் சுவர்களில் எழுதியிருப்பதன்படி பார்த்தால் தேர்தலில் திரு. ஜெயவர்த்தனவுக்கு என்ன கிடைக்கும் என்பதை அச்சொட்டாக ஊகித்துக் கொள்ள முடியும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை சுதந்திரக் கட்சி முற்றாக அகற்றுது; ஆனால் சில மாற்றங்களைக் கொண்டுவரும்.

ஜே. வி. பி. மீதான தடையை நிபந்தனையின்றி அரசு விலக்கிக் கொள்ள வேண்டும். தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு மன்னிப்பு வழங்க முடியும் என்றால் ஜே. வி. பிக்கு ஏன் வழங்க முடியாது?

தேர்தல் கல்லூரிகள் மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் முறையை நான் எதிர்க்கின்றேன். மக்களினால் நேரடியாக ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (ஒ-எ)

### பன்றித்தலைச்சி அம்மன் விழா

சாவகச்சேரி, மார்ச் 11
பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பங்குனித் திங்கள் விழா இன்று 14ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பங்குனி மாதத்தில் வரும் ஐந்து திங்கட்கிழமைகளிலும் இவ்விழாக்கள் இடம் பெறும். (ஒ-31)

## பஸ் தாக்கப்பட்ட இடத்துக்கு ஸ்ரீலங்கா இராணுவம்-பொலீஸ்

கொழும்பு, மார்ச் 14
தமிழர், முஸ்லிம்கள் பயணம் செய்த பஸ் ஒன்று தாக்கப்பட்ட இடத்துக்கு இலங்கை இராணுவமும் பொலிஸாரும் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அனுராதபுரத்துக்கு அருகில் ரொட்டேவேவா என்னுமிடத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த பஸ்ஸில் பயணஞ் செய்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது தெரிந்ததே.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்தது.

இறந்தவர்களில் இரண்டுபேரின் சடலங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டன. ஏனையவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. பஸ் எரிக்கப்பட்டதன் காரணமாக அச்சடலங்கள் அடையாளம் காணமுடியாதபடி சிதைந்துவிட்டனவாம்.

சம்பவம் நடந்த இடத்தில் 250 இலங்கைத் துருப்புக்கள் நிலைகொண்டுள்ளன

பாதுகாப்புப்படையினர் நடத்திய தேடுதலில் 17 பேர் கைது செய்யப்பட்டனர். யார் இத் தாக்குதலுக்குப் பொறுப்பு என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை (ஒ-எ)

### வடமராட்சி சுற்றிவளைப்பு

வடமராட்சி, மார்ச் 14
கடந்த சனிக்கிழமை வடமராட்சியின் பல பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு, தலையாட்டியின் முன் நிறுத்தி விசாரணை செய்தபின் விடுதலைசெய்யப்பட்டார்கள் (ஒ-16)

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்

## தொலைக்காட்சிப் பேச்சு: நேரத்தை வழங்கும் அதிகாரம் ஆணையாளரிடம்

கொழும்பு, மார்ச் 14
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொலைக் காட்சியில் பேசும் நேரத்தை வழங்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்படவுள்ளது

எவ்வளவு நேரம் ஒரு வேட்பாளருக்கு வழங்கப்படவேண்டும் என்பதை ஆணையாளரே இனித் தீர்மானிப்பார்.

இதற்கு வழி செய்யும் முகமாக ஜனாதிபதித் தேர்தல் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவரப்படவிருக்கின்றது (எ-எ)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும்

### ருக்மன் கட்சி பிரகடனம்

கொழும்பு, மார்ச் 14
நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என்று ருக்மன் சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியின் கொள்கைத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இக்கட்சியின் முதலாவது தேசிய மாநாடு எதிர்வரும் மே மாதம் 21ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்

கட்சியின் கொள்கைத் திட்டம் இம்மாநாட்டில் வெளியிடப்படும்.

தேர்தல் விகிதாசார அடிப்படையில் நடத்தப்படும்.

தெரிவு செய்யப்பட்ட எம்பிக்கள் உயர் நீதிமன்றத்தினால் மட்டுமே அகற்றப்பட முடியும்.

செனட்சபை என்ற மேல் சபை மீண்டும் கொண்டு வரப்படும். இச்சபையில் விஞ்ஞானிகள் கலைஞர்கள், கல்வி விற்பன்னர்கள் நியமிக்கப்படுவர்

நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிக்கப்படும். நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளினாலும் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி முறை நடைமுறைப்படுத்தப்படும்.

கிராம, பட்டினசபை முறை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்படும் (ஒ-எ)

## ஒருநாள் போரில் 1,000 ஈரானிய வீரர்பலி

### ஈராக் உரிமை கோருகிறது

பக்தாத், மார்ச் 13
வளைகுடாப் போரில் சனிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற சண்டையில ஈராக் இராணுவம் சுமார் ஆயிரம் ஈரானிய வீரர்களைக் கொன்று விட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பக்தாத் நகரில் அரசு இராணுவ அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

ஈரானிய இராணுவத்தின் ஓர் அணி ஈராக் பிரதேசத்தின் மீது தாக்குதலை நடத்தியது என்றும் ஈராக்கிய படைகள் அதனை முறியடித்து விட்டன என்றும் அவர் சொன்னார்.

ஈரானிய இராணுவத்தின் ஓர் அணியில் 1500வீரர்கள் இருப்பர்.

### 90 பேருக்கும் நஷ்டஈடு

நேபாளத் தலைநகரில் காத்மாண்டுவில் சன நெரிசலில் சிக்கி உயிரிழந்த 90 பேரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்று மன்னர் அறிவித்திருக்கின்றார்.

இச் சம்பவம் பற்றி விசாரணை நடத்த தனிநபர் விசாரணைக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கின்றது (ஒ-எ)

### அமெரிக்க யோசனை நிராகரிப்பு

டமஸ்கஸ், மார்ச்.13
மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அமெரிக்க அரசு சமர்ப்பித்தயோசனையை பலஸ்தீன விடுதலை இயக்கமும் நிராகரித்து விட்டது

பலஸ்தீனியர்களுக்கு மாவட்ட ரீதியிலான சுயாட்சி வழங்க வேண்டும் என்று அமெரிக்க யோசனை வலியுறுத்துகின்றது.

இந்த யோசனையை இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் ஏற்கனவே நிராகரித்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பேசும் மக்கள் பிரச்சினை பற்றி ஆராய நாளை நடக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14
இப்போதைய பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காகத் தமிழ்பேசும் மக்கள் சகலருக்குமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை செவ்வாய் கிழமை நடைபெறும்.

தமிழ்பேசும் மக்களை எதிர்நோக்கி இருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும், மக்கள் அனுபவித்து வரும் சொல்லொணாத் துன்பங்களையும் நீக்கும் வழிவகைகள் பற்றி இதில் ஆராயப்படும்.

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நாளை மாலை 2 30 மணிக்குப் பிரஸ்தாப கூட்டம் ஆரம்பமாகும்

யாழ். மாநகர ஆணையாளர், பிரஜைகள் குழுக்கள், அன்னையர் முன்னணி, கல்விமான்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் மக்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

ஆலோசனைக் கூட்டத்தை ஒழுங்குசெய்த அமைப்புக்குழுவின் சார்பில் சமாதான நீதிவான் வ சிவபாலசிங்கம், சட்டத்தரணி மு சோமசுந்தரம் ஆகியோர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். (இ-7)

### மக்கள் நலன் காக்கும் பிரிவு

யாழ்ப்பாணம் மார்ச்14
இதுவரை காலமும் இபாலை நலன்காக்கும் பிரிவு என்ற பெயரில் இயங்கிவந்த பொது மக்கள் அமைப்பு தற்பொழுது "மக்கள் நலன் காக்கும் பிரிவு- இருபாலை, கோப்பாய் தெற்கு" என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. (ஒ-9)

### பாடசாலை அபி. சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்14
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் நடைபெற உளளது.

அதிபர் திரு வ. தங்கராசா தலைமையில், கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது (ஒ-10)

## தென்னிலங்கை மாணவர் 37 ஆயிரம் பேர் நிர்க்கதியில்

கொழும்பு, மார்ச் 14
தென் இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டிருப்பதால் சுமார் 37 ஆயிரம் மாணவர் நிர்க்கதி நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது

இவர்களில் சுமார் 25 ஆயிரம் பேர் பட்டதாரி மாணவர் சுமார் 12 ஆயிரம் பேர் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை சித்தி அடைந்துவிட்டு பல்கலைக்கழகத்தில் சேரக் காத்திருப்பவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது (ஒ-எ)

### வலைப்பந்து மத்தியஸ்தர் பரீட்சை

இலங்கை வலைப்பந்தாட்ட கட்டுப்பாட்டு சபையினால் நடத்தப்படும் "சி" பிரிவு மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும்.

இதற்கான விண்ணப்ப முடிவு எதிர்வரும் 15ஆம் திகதி ஆகும்

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும், யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு கே. ஏகாம்பரம் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி, திரு. ஏ. எஸ். குணரெத்தினம் ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளலாம் (இ-7)

## பசளையில் கலப்படம்: தண்டிக்கச் சட்டம்

கொழும்பு, மார்ச் 14
பசளையில் கலப்படம் செய்வோரைத் தண்டிக்கும் சட்டம் ஒன்று கொண்டு வரப்படவிருப்பதாக தேசிய பசளைச் செயலகத்தின் இயக்குநர் திரு. சி. ஆர். குருப்பு தெரிவித்தார்.

புதிய சட்டத்தின் கீழ் கலப்படம் செய்யும் வர்த்தகர்கள், தனியார் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும்

விசாரணை முடிவில் குற்றவாளியாகக் காணப்படுவோருக்கு 2500 ரூபாவுக்குக் குறைவில்லாத, 5 ஆயிரம் ரூபாவுக்கு அதிகப்படாத அபராதமும் அல்லது ஆறு மாதங்களுக்கு உட்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் (இ:எ)

### பலாங்கொட...

(1ம்பக்கத் தொடர்ச்சி)
பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரபல வர்த்தகர் ஒருவரை ஏற்றிச் சென்ற காரின் மீது சந்தேக நபர் முதலில் சுட்டாராம். அந்த வர்த்தகருக்குப் பாதுகாப்பாகச் சென்ற பொலீஸார் திருப்பிச் சுட்டபோது இவர் உயிரிழந்தார் (ஒ-எ)

### போக்குவரத்து - - - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பொருள் முடிந்துவிட்ட காரணத்தினாலும் தொடர்ந்து சீரான சேவையை நடத்துவதில் கஷ்ட நிலை நிலவிவந்தது

ஆனாலும் வவுனியா, முல்லைத் தீவு போன்ற தூர சேவை பஸ்களிலுள்ள எரிபொருள் கொள்கலன்களின் மூலமே இந்த நெருக்கடியைத் தற்போது ஓரளவு சமாளித்து வருகின்றோம்.

மேலும் நெருக்கடிநிலை தோன்றுமேயானால், தென் பகுதியிலிருந்து பவுஸர்களின் மூலம் எரிபொருளை எடுத்துப் பயன்படுத்துவதுடன், மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையும் நடத்த வேண்டிய நிலை ஏற்படும். இப்படி அவர் மேலும் கூறினார். (இ-9)

### கலைஞர் கருணாநிதி - - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)
குள் வரவேண்டும்.

**கருத்து வேறுபாடு**

கே: உங்களுக்கும் நெடுஞ்செழியனுக்கும் கருத்து வேறுபாடு என்று கூறப்படுகிறதே?

ப: எங்களுக்குள் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. நான் இங்கு வருவதற்கு முன்பு அவரிடம் ஆசி பெற்றுத் தான் வந்தேன்.

கே: மாநில சுயாட்சிக்கொள்கை பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று புரட்சித் தலைவர் சொன்னார். அவர் வழியில் நடப்பது தான் எங்கள் மாறாத கொள்கை. இதே நிலையைத்தான் புரட்சித் தலைவர் இருக்கும்போது சர்க்காரியா கமிஷனுக்கு வலியுறுத்திக் கொடுக்கப் பட்டது.

இவ்வாறு ஜெயலலிதா கூறினார் மேலும் அவர் கூறியதாவது:-

**என் முதல் எதிரி**

தி. மு. க. தலைவர் கருணாநிதி, புரட்சித் தலைவருக்கு எதிரியாக இருந்தார். எனவே எனக்கு முதல் எதிரி கருணாநிதிதான்.

கருணாநிதி ஒரு அழிவு சக்தி. அவரை எப்போதும் நான் எதிர்ப்பேன். (ஒ-உ)

### தென்னிலங்கை --

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தேசங்களிலும் இலங்கை -இந்திய கூட்டுக் கட்டளை ... படுத்தப்பட்டுள்ளது ...

### பேச்சுக்களை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
போக்குக் குறித்து நாம் அஞ்சுகின்றோம்

நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் என்று கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி மட்டக்களப்பு அன்னையரைக் கௌரவிக்கும் வகையில் வெளிப்படுத்தியிருந்தோம்

இந்திய அரசுக்கும் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்து நிபந்தனையற்ற பேச்சு நடத்த இருக்கின்றோம் என்பதை அதிகார பூர்வமாக உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழர் பகுதியில் மீண்டும் அமைதி ஏற்பட சம்பந்தப்பட்டபிரச்சினைகளுக்குத் தீர்வு காண பேச்சுவார்த்தை துவங்க வேண்டுகின்றேன்

இப்படி விடுதலைப் புலிகள் தலைவரின் செய்தி ... உள்ளதாக இந்திய வானொலி தெரிவித்தது (ஒ-எ)


### 6 ஆம் கிழமை அறிவித்தல்

இளவாலை புனித அன்னம்மாள் ஆலய புனித வியாகுலமாதா வணக்க வழிபாடுகள் 20-03-88 — 25-03-88 ஆகிய நாட்களில் நடைபெறும். கடைகள் போடுவதோ அன்னதானம் வழங்குவதோ இங்கு கண்டிப்பாக விலக்கப்பட்டுள்ளது என்பதைப் பக்தர்களுக்கு அறிவிக்கிறோம். ஏழைகளுக்கும் அகதிகளுக்கும் உதவ முன்வருவோர் பங்குத் தந்தையுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

பங்குத்தந்தை
இளவாலை

(1941)



## 180ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திகதி: 14 - 3 - 1988

தோற்றம்: 10 — 02 — 1937



மறைவு: 18 — 10 — 1987

சின்னப்பு கதிர்காமநாதன்

மாண்புடன் ஐம்பதாண்டு மதிப்புடன் வாழ்ந்து வந்த
வானபுகழ் எங்கள் தெய்வம் தன்னை வந்தனர் பெரியோர் என!
நாட்டினை அமைதி காக்க வென்று எங்கள்
வீட்டினின் அமைதியைக் குன்றினரே!

அன்னாரின் ஆத்ம சாந்தியை முன்னிட்டு 180 ஆவது நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பை ஏற்று சமுகம் தருமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள், மருமகன்

சோதிவேம்படி வீதி, மானிப்பாய்

(2043)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம நாவலர் வீதி 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 14-03-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Monday, 14th March 1988.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org